# திருக்குறள் - கலங்கரை விளக்கம்

# உன்னத வழிகாட்டி



**சேகர் சந்திரசேகர்**
**சிகாகோ**

இலக்கியமாவது எது ? எவை யெல்லாம், புவியியல் எல்லைகளைக் கடந்து, கலாச்சார வேறுபாடுகளைக் கடந்து, எக்காலத்திற்கும் பொருந்தும் செய்திகளைத் தாங்கி வந்து, மனித வாழ்வியலை உச்சத்திற்குக் கொண்டு செல்கின்றனவோ, அவையெல்லாம் இலக்கியம் என்றாகிறது.

எக்காலமும் ஏற்புடைய நற்செய்திகளும், நாகரிகம், கலாச்சாரம், பண்பாடு என மனித வாழ்வின் அத்தனை கூறுகளையும், கூர்மையாக்கி, முன்னேற்ற வாழ்க்கைக்கு உறுதுணையாயிருப்பதுமான இலக்கிய நூல் ஒன்று உண்டென்றால், திருக்குறள் என்று ஆணித்தரமாகக் கூறலாம். இந்தப் பரந்த உலகில், உலகளாவிய இலக்கியப் படைப்புகளினிடையே, பண்டைய தமிழ்ப் பாரம்பரியமான திருக்குறள், ஒளி குன்றா ரத்தினமாக விளங்கி வருகிறது.

பொதுவாக "குறள்" என்று குறிப்பிடப்படும், திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளில் மொத்தம் 1330 குறட்பாக்கள் உள்ளன. இவை அத்தியாயத்துக்குப் 10 குறட்பாக்களாக, 133 அத்தியாயங்களாகப் பிரிகிறது. இந்த 133 அத்தியாயங்களும், முப்பால் என்று அழைக்கப்படும், அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற 3 தலைப்புகளில் பொருத்தமாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. இக்குறட்பாக்களின் அடிப்படை அம்சம், உலக மக்களின் அக, புற வாழ்க்கைக் கூறுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை எளிமையாக வரையறுத்துக் கூறுவதே ! தனிநபர்களின் கலாச்சார சூழலைப் பொருட்படுத்தாமல் ஒரு விரிவான வழிகாட்டியாகத் திருக்குறள் அமைந்துள்ளது.

திருவள்ளுவர் புத்திசாலித்த
ஒவ்வொரு குறட்பா
எக்காலத்திற்கும் பொருந்தும் வ
இயற்றிருப்பது, இதன் உலக
தன்மைக்குச் சான்று.

திருக்குறளின் குறிப்பிடத்
அம்சங்களில் ஒன்று அதன் அணு
பழங்காலத் தமிழ்ப் பண்பாட்டி
தோன்றியிருந்தாலும், அது வலியு
கொள்கைகள் ஒரு குறிப்
மக்களுக்காகவோ, காலத்திற்கோ
இடத்திற்கோ மட்டுப்படுத்தப்பட
மொழி பேதம், இனபேதம், கால
எல்லாவற்றையும் கடந்து
திருக்குறள். குறட்பாக்களின்
அதன் சுருக்கமான மற்றும் எளிமை
கவிதைத்தன்மையே!இத்தன்மையா
திருக்குறள், பல்வேறு மக்களால் எ
அணுகப்படுகிறது. பல்வேறு மொழிகளில் எ
மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்
மொழிபெயர்ப்புகளால், உலகின் பல்வேற
மக்கள், திருக்குறளின் ஆழமான போதனை
கற்றும், ஆராய்ச்சி செய்தும் வருகின்
இக்குறட்பாக்களில் பொதிந்துள்ள கருப்பொ
உலகளாவிய தன்மையால், வெவ்வேறு மொழ
மற்றும் கலாச்சார பின்னணியில் உள்ள மக்களி
திருக்குறள் பிரபலம் அடைந்துள்ளது.

திருக்குறளின் கருப்பொருட் செழுமை, வாழ்
நெறிமுறைக்கு, ஒரு கலங்கரை விளக்காக இரு
என்றால் அது மிகையில்லை. தர்மம் (அறம்
நேர்மை போன்ற நற்பண்புகளை வலியு
நெறியான வாழ்க்கைக்கு ஒரு விரிவான கட்டமை
இக்குறட்பாக்கள் வழங்குகின்றன. இந்த நெறி
கொள்கைகளின் தொகுப்பு, மனிதர்களிடையே

# செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
# செல்வத்து ளெல்லாந் தலை. குறள் – 411




## செல்வகுமார் துரைசாமி

நல்லுறவை மேம்படுத்தி, உலக வாழ்வின் ஒற்றுமைக்கு உந்து சக்தியாக இருக்கிறது. கலாச்சார வேறுபாடுகளைக் கடந்து, கருணை, உண்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய திருக்குறளின் போதனைகள், வாழ்வியல் நெறிமுறைக்கான பொதுவான தளத்தை வழங்குவதால், உலகின் தலைசிறந்த இலக்கியமாகிறது.

திருக்குறளில் சொல்லப்படாத துறைகள் என்று ஒன்றுமில்லை. தத்துவம், நெறிமுறை, நீதி, ஆட்சி, ஆளுமை, காமம், ஒழுங்கு, உண்மை என்ற வாழ்வியல் கூறுகளின் மதிப்பீடுகளை, எளிமையாக எடுத்துக்கூறி காலம் கடந்த செவ்விலக்கியமாகத் திருக்குறள் இருக்கிறது. மனித இயல்பு மற்றும் சமூக இயக்கவியல் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளை திருக்குறள் எடுத்துக் காட்டும் விதத்தை, பல்வேறு கலாச்சார பின்னணியில் இருக்கும் அறிஞர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் வியந்து அங்கீகரித்துள்ளனர். சமகால உலகில் அதன் போதனைகளின் நீடித்த பொருத்தத்தை விளக்கி, உலக அளவில் உள்ள தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள், நியாயமான ஆட்சி மற்றும் தலைமைக் குணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் மதிப்புமிக்க படிப்பினைகளை திருக்குறளின் மூலம் பெற்றுவருகின்றனர்.

ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், லத்தீன், போன்ற, ஏறக்குறைய ஐம்பதுக்கும் மேலான உலக மொழிகளில் திருக்குறளின் மொழிபெயர்ப்புகள் கிடைக்கின்றன. இம்மொழிபெயர்ப்புகள், உலகளாவிய பரந்த பார்வையாளர்களைச் சென்றடைய வழிவகுத்தது. திருக்குறளின் ஆழமான நுண்ணறிவால் கவரப்பட்ட புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள், பல்வேறு சமூகங்களுக்குத் திருக்குறளின் முக்கியத்துவத்தை உணரச் செய்யும் வகையில், அந்தந்த மொழிகளில் அதை மொழிபெயர்க்கும் பணியை மேற்கொண்டுள்ளனர். திருக்குறளின் உலகளாவிய அங்கீகாரம் அதன் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதில் தெளிவாகத் தெரிகிறது.

இந்த மொழிபெயர்ப்புகள் திருக்குறளின் சாரத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், உலக அளவில் அதைப் பரப்புவதற்கும் பாராட்டுவதற்கும் வழிவகுத்துள்ளன.

உலக இலக்கியமான திருக்குறளின் பெருமை அதன் மொழியியல் தோற்றத்திற்கு ஒரு சான்றாக மட்டுமில்லாமல், அதன் உலகளாவிய ஈர்ப்பால் உலகப் பொதுமறையாக அறியப்படுகிறது. அதன் போதனைகள் உலகெங்கிலும் உள்ள தனிநபர்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வழிகாட்டுகின்றன. மனிதநேய உணர்வை வளர்க்கின்றன. திருக்குறள், ஒழுக்கம், நெறிமுறைகள், நல்லொழுக்க வாழ்வு போன்ற பொதுவான இழைகள்மூலம் மக்களை இணைக்கும் ஒரு பாலமாக நிற்கிறது. ஆகவே, இவ்வளவு சிறப்பு வாய்ந்த திருக்குறள், உலகப் பொது நூல் என்பதும், அகில உலக ஞான நூல் என்பதும் உலகாளாவிய உண்மை.

### திருவள்ளுவர் - குறள் மாநாடு

புலவர்கள் மத்தியில் மட்டும் நடமாடிக் கொண்டிருந்த குறளை மக்கள் மத்தியில் தவழச் செய்ய முதன் முதலில் சென்னையில் 5.01.1949 அன்று திருவள்ளுவர் - குறள் மாநாடு தந்தை பெரியாரால் நடத்தப்பட்டது.இம்மாநாடு 15,16 சனி, ஞாயிறுகளில் இரண்டு நாள் மாநாடாக நடத்தப்பட்டது.

